தலைப்பு 198 நீர்ப்பாசன அமைச்சு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 198 – நீர்ப்பாசன அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நீர்ப்பாசன அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் நீர்ப்பாசன அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை நீர்ப்பாசன அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மூலதனச் செலவினங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் கிவுல் ஓயா நீர்தேக்க செயற்திட்டத்தின் மற்றும் மாதுரு ஓயா நீர்தேக்க செயற்திட்டத்தின் திரட்டப்பட்ட செலவுகள் முறையே ரூபா 29.68 மில்லியன் மற்றும் ரூபா 906.34 மில்லியன் ஆக காணப்பட்ட போதிலும் அமைச்சினால் 2024 திசெம்பர் 31 இல் நிதி நிலைமைக் கூற்றில் நிதி அல்லாச் சொத்துக்களில் கிவுல் ஓயா நீர்தேக்க செயற்திட்டத்தின் கீழ் ரூபா 31.65 மில்லியன் மற்றும் மாதுரு ஓயா நீர்தேக்க செயற்திட்டத்தின் கீழ் ரூபா 390.20 மில்லியன் என காண்பிக்கப்பட்டிருந்தது.	மாதுரு ஓயா மற்றும் கிவுல் ஓயா செயற்திட்டங்களின் மேல் நடவடிக்கைகள் மகாவலி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது செயற்திட்டங்களின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், நிதிக் கூற்றுக்களில் கணக்கு செய்யப்பட்டுள்ள அச் செயற்திட்டங்களுக்கு அமைச்சினால் ஏற்கப்பட்ட செலவு இனங்காணப்பட்டு பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	செயற்திட்டங்களின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு அவற்றின் நடவடிக்கைகள் கையளிக்கும் வரையில் ஏற்கப்பட்ட செலவுகள் இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	2024 மற்றும் 2025 ஆம் ஆண்டிற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்படாது நிர்மாணிப்பு நிறுத்தப்பட்டுள்ள அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்கள் 2024 வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் செலவு ரூபா 5,027.23 மில்லியன் ஆக காணப்பட்ட போதிலும் இந்த பெறுமதி நிதிக் கூற்றுக்களில் நடைமுறையிலுள்ள வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.	நிர்மாணிப்பு நிறுத்தப்பட்டுள்ள அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட 3 செயற்திட்டங்களுக்காக 2024.12.31 ஆம் திகதி வரை ஏற்கப்பட்டுள்ள செலவுகள் உறுதி செய்யப்பட்ட பின்னர், அச் செலவுகள் நிதிக் கூற்றுக்களில் நடைமுறையிலுள்ள வேலையின் கீழ் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இந்த செயற்திட்டம் எதிர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு மூலதனமாக்கப்படும் வரையில் நிதி கூற்றுக்களில் நடைமுறையிலுள்ள வேலையின் கீழ் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	நிதி அல்லாச் சொத்துக்களுக்கான உமா ஓயா திசைதிருப்பல் செயற்திட்ட செலவாக கணக்கு வைக்கப்பட்டுள்ள பெறுமதி ரூபா 17,733.19 மில்லியன் ஆன போதிலும் 2024 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட கணக்குகள் பிரகாரம் அச் செயற்திட்டத்தின் செலவு ரூபா 80,820.26 மில்லியன் மற்றும் 2024 செப்தெம்பர் மாதம் தொடக்கம் திசெம்பர் 31 வரை அமைச்சினால் ஏற்கப்பட்ட செலவு ரூபா 115.11 மில்லியன் ஆகியமையினால் கூட்டு பெறுமதி ரூபா 80,935.37 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதிக் கூற்றில் குறைவாக காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி ரூபா 63,202.18 மில்லியன் ஆகும்.	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றில் காணியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 18,982.97 மில்லியன் பெறுமதியினுள் உமா ஓயா திசைதிருப்பல் செயற்திட்டத்திற்குரிய ரூபா 17,733.19 மில்லியன் பெறுமதியும் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. தற்போது உமா ஓயாவிற்குரிய காணி "இலங்கை மகாவலி அதிகார சபைக்கு" பௌதீக ரீதியாக கையளிக்கப்பட்டுள்ளது. எனினும் அக் காணிகளின் நிதி ரீதியான பெறுமதி இலங்கை மகாவலி அதிகார சபைக்கு கையளிப்பதற்கு முடியாத காரணம் செயற்திட்டத்திற்குரிய செலவுகள் தொடர்ந்தும் ஏற்கப்பட்டு வருவதனால் ஆகும். அதன் பிரகாரம் ஒட்டுமொத்த நடவடிக்கைகளின் இறுதியில் காணிகளின் நிதி ரீதியான பெறுமதி கணிக்கப்பட்டு இலங்கை மகாவலி அதிகார சபைக்கு கையளிப்பதற்கு	பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களின் சரியான செலவு நடைமுறையிலுள்ள வேலையின் கீழ் கணக்கு வைக்கப்படல் வேண்டும்.

		நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(iii)	2024 மே மாதத்தின் போது தல்பிடிகல நீர்தேக்க செயற்திட்டத்தின் அனைத்து பணிகளும் சொத்துக்களும் நீர்பாசன திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டு அதனுடன் அச் சொத்துக்களுக்குரிய நீர்பாசன அமைச்சின் சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ள ரூபா 96.96 மில்லியன் சொத்துக்கள் பட்டியலும் நீர்பாசன திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2024 ஆம் ஆண்டிற்குரிய நீர்பாசன அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாச் சொத்துக்களில் தல்பிடிகல நீர்தேக்கத்திற்காக 2022 ஆம் ஆண்டில் ஏற்கப்பட்ட ரூபா 199.21 மில்லியன் செலவு சொத்துக்களாக தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தல்பிடிகல நீர்தேக்க செயற்திட்ட கணக்குகள் பிரகாரம் தல்பிடிகல நீர்தேக்கத்திற்காக அமைச்சினால் ஏற்கப்பட்ட மொத்த செலவு ரூபா 646.87 மில்லியன் ஆகியமையினால் ரூபா 350.70 மில்லியன் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	தல்பிடிகல நீர்தேக்க செயற்திட்டம் தற்போது நீர்பாசன திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்றமையினால் அச் செயற்திட்டத்திற்குரிய அமைச்சின் நிதிக் கூற்றுகளில் நீர்தேக்கங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா. 199.21 மில்லியன் பெறுமதி அமைச்சின் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டு நீர்பாசன திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்டும்.	செயற்திட்டத்திற்காக அமைச்சினால் ஏற்கப்பட்ட சரியான செலவுகள் நீர்பாசன திணைக்களத்திற்கு கையளிக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு கையளிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சின் நிதிக் கூற்றுக்களிலிருந்து அச் சொத்து அகற்றப்படல் வேண்டும்.
(iv)	2024 மே மாதத்தின் போது கீழ் மல்வத்து ஓயா நீர்தேக்கச் செயற்திட்டத்தின் அனைத்து பணிகளும் சொத்துக்களும் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டு அதனுடன் நீர்ப்பாசன அமைச்சின் சொத்துக்கள் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 38.40 மில்லியன் ஆன சொத்துக்கள் அமைச்சின் சிகாஸ் (CIGAS) அமைப்பிலிருந்து அகற்றப்பட்டு நீர்ப்பாசன திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.	கீழ் மல்வத்து ஓயா நீர்தேக்கச் செயற்திட்டம் தற்போது நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்படுவதால் அச் செயற்திட்டத்துடன் தொடர்புடைய அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் நீர்த்தேக்கங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 495.63 மில்லியன் பெறுமதி அமைச்சின் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டு நீர்ப்பாசன	-மேற்படி-

	அவ்வாறெனிலும் 2024 ஆம் ஆண்டிற்குரிய நீர்ப்பாசன அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் நிதி அல்லாச் சொத்துக்களில் நீர்தேக்கங்களில் கீழ் மல்வத்து ஓயா நீர்தேக்க செயற்திட்டத்திற்காக ஏற்கப்பட்ட ரூபா 495.63 மில்லியன் தொடர்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.	திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(v)	மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு தளத்தின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர்ப்பாசன அமைச்சின் கீழ் 519 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற (வெளிநாட்டு செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களை தவிர்த்து) வாகனங்களின் எண்ணிக்கை 137 ஆகவும் நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்கள் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை 37 ஆகவும் காணப்பட்டது. அதன் பிரகாரம் அமைச்சு பயன்படுத்துகின்ற 100 வாகனங்களின் தகவல்கள் மற்றும் அவற்றின் பெறுமதிகள் நிதி அல்லாச் சொத்துக்கள் கீழ் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை 37 ஆவதுடன் அவற்றின் பெறுமதி ரூபா 311.84 மில்லியன் ஆகும். இதற்கு மேலதியமாக இறுதி கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டிய அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களின் பெறுமதி இந்த ஆண்டினுள் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அமைச்சிற்கு சொந்தமான அனைத்து வாகனங்களினதும் பெறுமதிகள் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அனைத்து வாகனங்களும் நிலையான சொத்துக்கள் பதிவெட்டிற்கு உள்ளடக்கப்பட வேண்டும்.
(vi)	நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் வெளியிடப்பட்ட 2017 யூன் 28 திகதிய 01/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைச்சேரி சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் கிரய முகாமைத்துவத்திற்காக அரசாங்கத்தின் அனைத்து நிதி அல்லாச் சொத்துக்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கணக்கு பிரிவினால் அமைச்சிற்குரிய மேற்படி 100 வாகனங்கள் தொடர்பான பெறுமதியுடன் ஏனைய விரிவான	01/2017 சுற்றறிக்கை பிரகாரம் வாகனங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை பிரகாரம் அனைத்து வாகனங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. எனவே மேற்படி 100 வாகனங்கள் தொடர்பான கிரயம் சரியாக உறுதி செய்யப்பட முடியவில்லை.		

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டினுள் அமைச்சினால் திட்டமிடப்பட்ட பணிகள் நிறைவேற்றுவதற்காக மொத்த கட்டுநிதி தேவை ரூபா 14,190.18 மில்லியன் ஆக காணப்பட்டது. அதில் பெறப்பட்டிருந்த மொத்த கட்டுநிதி ரூபா 11,280.38 மில்லியனாவதுடன் பயன்படுத்தப்படாது திருப்பி அனுப்பப்பட்ட பெறுமதி ரூபா 1,451.78 மில்லியன் அதாவது 12.86 சதவீதம் ஆகும். இதில் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற 03 செயற்திட்டங்களின் குறைபயன்பாட்டினால் மீண்டும் திறைச்சேரிக்கு திருப்பி அனுப்பப்பட்ட கட்டுநிதி மட்டும் ரூபா 1,358.41 மில்லியனான காணப்பட்டது.	பயன்படுத்தப்படாது திறைச்சேரிக்கு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்ட பெறுமதி ரூபா 1,451.78 மில்லியன் என ஏற்றுக் கொள்கின்றேன். அமைச்சின் ஊடாக திறைச்சேரியிடமிருந்து கட்டுநிதி விண்ணப்பிக்கப்படுவது ஒவ்வொரு செயற்திட்டங்களின் கணக்காளர்களினால் அவர்களுக்கு தேவைப்படுகின்ற கட்டுநிதி தெரிவிக்கப்பட்டு அனுப்பப்பட்ட பின்னராகும். எவ்வாறெனிலும் இவ்வாறு தேவையற்ற பிரகாரம் கட்டுநிதி விண்ணப்பிக்காதிருத்தல் மற்றும் நிறுத்தி வைக்காதிருத்தல் தொடர்பாக 2025 ஆம் ஆண்டின் ஆரம்பம் தொடக்கம் செயற்பட வேண்டிய முறை தொடர்பாக 2025 சனவரி 27 ஆம் திகதி கூட்டமொன்று நடத்தப்பட்டு அனைத்து செயற்திட்டங்கள் மற்றும் நிறுவனங்களின் கணக்காளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.	கட்டுநிதி விண்ணப்பிக்கும் போது சரியான முன்கணிப்பின் அடிப்படையில் தேவைகள் இனங்காணப்பட்டு தேவையான கட்டுநிதி மற்றும் விண்ணப்பித்தலும் தேவையற்றவாறு நிறுத்தி வைக்கப்படாதிருக்க விரைவாக முறைமையொன்று அறிமுகப்படுத்தல் மற்றும் அந் நடவடிக்கைகள் தொடர்பாக தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும்.

3.2 வருமான முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிலுவை வருமான கூற்றின் பிரகாரம் மொரகஹகந்த நீர்மின் செயற்திட்டத்திற்குரிய நிர்மின் விற்பனைக்காக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 447.32 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 434.41 மில்லியன் 2024 ஆம் ஆண்டின் ஒக்தோபர் தொடக்கம் திசெம்பர் வரையிலும், ரூபா 11.22 மில்லியன் 2023 ஆம் ஆண்டிற்குரியதாகவும், ரூபா 1.69 மில்லியன் 2022 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரியதாக நிலுவையாக காணப்பட்டது.	தற்போது 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக நிலுவை வருமானம் இல்லாததுடன், எதிர்காலத்தில் பெறுவனவுகள் தாமதிக்கும் பட்சத்தில் வட்டித் தொகையொன்று அறவிடப்படுவதற்கு முடியுமான வகையில் ஒப்பந்தம் நாளதுவரையாக்கப்படுவதற்கான சாத்தியக்கூறு குறித்து தேடியறிவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	மாதாந்தம் பெற வேண்டி வருமானம் தாமதமின்றி அறவிடப்படுவதற்கு வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தல் வேண்டும்.

3.3 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மதிப்பீடு தயாரிக்கும் போது தேவை இனங்காணப்படாது நிதி ஒதுக்கப்படல், திட்டமிடப்பட்டாறு பணிகள் நிறைவேற்றப்படாமை போன்ற காரங்களினால் 2024 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட முறையாக ரூபா 13.00 மில்லியன் மற்றும் ரூபா 2.14 மில்லியன் தேறிய நிதியேற்பாடு பயன்படுத்தாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.	கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செலவின விடயங்களின் கீழ் நிதியேற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த அளவு செலவு செய்யப்படாது சேமிக்கப்பட்டமையை ஏற்றுக் கொள்கின்றேன். 2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் தயாரிக்கும் போது சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	24 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 11,308.87 மில்லியன் தேறிய நிதியேற்பாட்டில் கூட்டுத்தொகை ரூபா 5,077.85 மில்லியன் அதாவது 44.9 சதவீதம் சேமிக்கப்பட்டிருநந்தது. அச் சேமிப்பு 32 சதவீதம் மற்றும் 91 சதவீதம் இடையேயான வீச்சை கொண்டிருந்தது.	-மேற்படி-	-மேற்படி-

3.4 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டு இறுதி திகதியில் 02 ஆண்டுகளை மிகைத்த பொது வைப்புக்களிலிருந்த ஒப்பந்தக்காரர்களின் நிறுத்தி வைத்தல்கள் ரூபா 4.17 மில்லியனான வைப்புக்கள் தொடர்பாக நிதி பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	களு கங்கை இடது கரை அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிறுத்தி வைத்தற் தொகையான ரூபா 2.11 மில்லியன் விடுவிக்குமாறு திருகோணமலை நீர்ப்பாசன பணிப்பாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. நில்வலா எளிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிறுத்தி வைக்கப்பட்ட தொகாயன ரூபா 1.96 மில்லியன் தொகை விடுவித்துக் கொள்ளுமாறு காலி நீர்ப்பாசன பணிப்பாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ரூபா 49,004 ஆன தொகைக்கு தொடர்புடைய நிறுவனங்கள் ஊடாக நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தொகைகள் விடுவித்துக் கொள்வதற்கு விண்ணப்பிக்கப்படாததுடன் இது தொடர்பாக குறித்த நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பாக உறுதிப்படுத்தலொன்று கொடுக்காவிடின் யூன் மாதம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ரூபா 48,537 ஆன தொகை யூன் மாதம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நீண்ட காலமாக நிலவி வருகின்ற வைப்புக்கள் தொடர்பாக நிதி பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.5 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2017 ஏப்ரல் 27 திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2 (இ) பந்தியின் பிரகாரம் நிதி ஆண்டிற்குரிய கொடுப்பனவுகள் அந் நிதி	2024 திசெம்பர் கணக்கு தீர்க்கும் போது அமைச்சிற்கு பொறுப்புக்கள் காணப்படாததுடன் அதன் பின்னர் 2025 சனவரி மாதம்	ஆண்டிற்குரிய கொடுப்பனவுகள் ஆண்டினுள்ளேயே விடுவிப்பதற்கு வேலைத்திட்டமொன்று

ஆண்டினுள்ளேயே விடுவிக்கப்பட வேண்டியதுடன் எந்தவொரு பொறுப்பும் அடுத்த ஆண்டில் தீர்ப்பனவு செய்யும் நோக்கில் முன்கொண்டுச் செல்லப்படக் கூடாது. எனினும் 2024 திசெம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் ஆண்டிற்குரிய கொடுப்பனவுகள் ஆண்டினுள்ளேயே மேற்கொள்ளப்படாதமையினால் 206 சந்தர்ப்பங்களின் போது ரூபா 93.79 மில்லியன் பொறுப்புக்களுக்கு உட்படிட்டிருந்தது.	கடந்த ஆண்டிற்குரிய பற்றுச் சீட்டுகள் கிடைக்கப் பெற்றன. இதன் போது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட SA/92 அறிக்கையின் பிரகரம் நிலவிய பொறுப்புக்களுக்காக 2024 ஆம் ஆண்டின் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	அறிமுகப்படுத்தல் வேண்டும்.

3.6 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
நீர்ப்பாசன அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும், அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டிற்கு அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்வதற்கு முடியவில்லை என்பதுடன் 2025 ஆம் ஆண்டு தொடக்கம் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) **ஜின் நில்வளா திசைதிருப்பல் செயற்திட்டம்** இந்த செயற்திட்டம் 690 மில்லியன் ஐ.அ.டொ இற்கு கட்டுமானம் செய்வதற்கு சீனா கட்டுமான நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டு ஒப்பந்தம் 2014 நவம்பர் 05 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இதன் கட்டுமான பணிகள் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இங்கு வேலை ஆரம்பத்திற்கான முற்பணமாக ஒப்பந்த பெறுமதியில் 5 சதவீதம், அதாவது 34.5 மில்லியன் ஐ.அ.டொ. இற்கு சமனான ரூபா 4,011.04 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு 2015 சனவரி 07 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த செயற்திட்டத்தினால் ஏற்படக் கூடிய சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக நிலவுகின்ற நிச்சயமற்ற தன்மை காரணமாக முறையான ஆய்வு மேற்கொள்ளுமாறு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை உபகுழுவினால் அறிவுறுத்தப்பட்டமையினால் செயற்திட்டம் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது. இங்கு சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு அறிக்கை தயாரிப்பதற்காக மகாவலி மதியுரை பணியகத்துடன் ரூபா 38.85 மில்லியன் ஒப்பந்தமொன்றில் உடன்பட்டு அதற்காக ரூபா 16.56 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவ் அறிக்கை 2024 ஆகஸ்ட் 27 ஆம் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதற்காக 2025 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	செயற்திட்டம் சரியாக இனங்காணுதல், செயற்திட்டத்தை மதிப்பீடுகள் (project Appraisal) மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல், காணி கையகப்படுத்தல், இழப்பீடுகளை வழங்குதல், மீள்குடியேற்றம் போன்ற முக்கிய ஆரம்ப செயற்பாடுகளின் பின்னர் செயற்திட்ட ஒப்பந்தங்களில் உடன்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு மேற்கொள்ளாமை தொடர்பாக உத்தியோகத்தர்கள் பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறே சுற்றுசூழல் பாதிப்பு மதிப்பீடு அறிக்கைக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளுதல் விரைவுப்படுத்தப்பட்டு செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். மேலும் பாதீட்டில் ஒதுக்கப்படுகின்ற பணத்தொகை குறித்த ஆண்டிலேயே செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

செயலாற்றல் அறிக்கை மற்றும் கணக்கு அறிக்கைகள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 4,091.21 மில்லியன் அரசாங்கத்தினால் இந்த செயற்திட்டத்திற்காக ஏற்கப்பட்டிருந்த போதிலும் பொருளாதாரத்திற்கு இதனால் எந்தவொரு நலன்களும் கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) **மாதுரு ஓயா தெற்கு கரை கால்வாய் அபிவிருத்தி செயற்திட்டம்**

(i) இந்த செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 11 ஆண்டுகளுக்கு செயற்படுத்துவதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை கூட்டுத்தொகை ரூபா 14,500 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்படுவதற்கு நிதி அமைச்சரின் இணக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும் செயற்திட்ட பணிகள் ஆரம்பித்தல் 2021 ஆம் ஆண்டு வரை தாமதித்திருந்தமையின் காரணத்தினால் செயற்திட்டம் ஆரம்பிப்பதற்காக மட்டும் 11 ஆண்டுகள் கடக்கப்பட்டிருந்தது. பின்னர் இந்த செயற்திட்டத்திற்காக 2021 தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 1,689 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 906.34 மில்லியன் மட்டும் செலவு செய்யப்பட்டிருந்தது. இந்த தெற்கு கரை கால்வாய் அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஊடாக 14,000 ஹெக்டேர் விவசாய நிலத்தில் பயிர்ச்செய்ய முடிவதும், இந்த காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய செயற்திட்டங்களுடன் ஒப்பிடுகையில் அதிக நலன்களை வழங்கும் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு குறைவான மட்டத்தில் காணப்பட்ட போதிலும் இந்த செயற்திட்டத்திற்காக அதிக முன்னுரிமை அளிக்கப்படவில்லை.

நிதியேற்பாடு போதுமானதாக இன்மையினால், மாதுரு ஓயா இடது கரை அபிவிருத்தி பணிகள் முதலில் ஆரம்பிக்கப்பட்டு பகுதியளவில் கட்டுமான பணிகள் நிறைவு செய்யப்பட்டன. எனினும் மாதுரு ஓயா நீர்தேக்க அபிவிருத்தி செயற்திட்டத்தின் முழு நலன்களும் பெறப்படுவதற்காக மாதுரு ஓயா தெற்கு கரை பிரதேசம் மற்றும் பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ள இடது கரையும் அபிவிருத்தி செய்தல் அத்தியாவசிய விடமாகும்.

பிரதமர் செயலாளரின் 2022.10.07 திகதிய கடிதத்தின் ஊடாக RAMP குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்துவதற்கு, பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ள செயற்பாடுகள் நிறைவு செய்வதற்கு கட்டங்களாக செயற்படுத்தக் கூடிய வேலைத் திட்டமொன்று குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கட்டங்களாக செயற்படுத்துவதற்கு வேலைத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. தேசிய செயல்பாட்டு அறை ஒருங்கிணைப்பாளர்/ செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2023.10.11 திகதிய கடிதத்தின் பிரகாரம், செயற்திட்டம் அபிவிருத்தி

முன்னுரிமையின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடைந்துக் கொள்வதற்கு தாமதமின்றி செயற்திட்டற்கள் ஆரம்பிக்கப்பட்டு எதிர்பார்க்கப்படபட்ட நலன்கள் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

மேலும் பாதீட்டில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை குறித்த ஆண்டிலேயே செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	செய்யப்படுவதற்காக பொருத்தமான வணிக உதவியாளரொருவர் பொதுத் தனியார் கூட்டு அரச தனியார் கூட்டின் கீழ் தேடிக்கொள்ளுமாறு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.	
(ii) இடது கால்வாயின் 52+812 கி.மீ ஆம் இடத்திலிருந்து ஆரம்பிக்கும் LB L 8 கால்வாயின் 9+200 கி.மி வரையில் முழுமையாக கொங்கிரீட் இடப்பட்டிருந்ததுடன் 6,152 ஏக்கர் நெல் பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் 0 கி.மீ தொடக்கம் 2 +300 கி.மீ வரையான பகுதியில் 940 ஏக்கர் மட்டும் நெல் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. கொங்கிரீட் இடப்பட்டிருந்த கால்வாய் பராமரிக்கப்பட்டிராததினால் கால்வாய்க்குள் மண் விழுந்து, கால்வாய் அடையாளம் தெரியாத அளவில் மரங்கள் வளர்ந்து சில இடங்களில் கட்டுமானங்களுக்கும் சேதம் ஏற்பட்டிருந்தது.	வன பாதுகாப்பு திணைக்களத்தினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாத, இலங்கை மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான வலயம் 4 பகுதிக்குரிய ரன்சரதென்ன குளம் மற்றும் அதன் கீழ் பள்ளத்தாக்கு பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை மகாவலி அதிகார சபையினால் திட்டமிடப்பட்டு மதிப்பீகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2026 ஆம் ஆண்டில் நிதியேற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டு செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	கைவிடப்பட்ட செயற்திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் வரையில் அதன் கட்டப்பட்ட பகுதிகள் இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் சேதங்களிலிருந்து பாதுகாக்கப்படும் வகையில் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(iii) கால்வாயின் 6+500 கிலோமீட்டர் தொடக்கம் 14+292 வரையான பகுதி நிர்மாணிப்பதற்கு 12 ஒப்பந்த தொகுப்புக்களின் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் இடைநடுவே அமைந்துள்ள 7+500 கிலோமீட்டர் தொடக்கம் 8+800 பகுதி ரூபா 118.51 மில்லியனிற்கு மற்றும் 10+800 கிலோமீட்டர் தொடக்கம் 11+483 வரையான பகுதி ரூபா 99.08 மில்லியனிற்கு நிறைவு செய்யப்பட்டிருந்தது. எனினும் கால்வாயின் எஞ்சிய பகுதிகள் பூர்த்தி செய்யப்படாமையினால் நிர்மாணிக்கப்பட்ட பகுதியில் பொருளாதார நலன்கள் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. மேலும் 11+483 கிலோமீட்டர் மற்றும் 12+430 இடத்தில்	ஒப்பந்தத்தின் பிரகாரம், ஒப்பந்தக்காரர்களுக்கு அல்லது செயற்திட்டத்திற்கு கட்டுப்படுத்த முடியாத காரணங்கள் ஒவ்வொன்றாக பகுப்பாய்வு செய்யப்பட்டு, அதற்குரியதாக ஒப்பந்தக் காலம் நீடிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறு நீடிக்கப்பட்ட காலத்தினுள்ளும் ஒப்பந்தக்காரர்களுக்கு அல்லது செயற்திட்டத்திற்கு கட்டுப்படுத்த முடியாத காரணங்களினால் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் எழுத்துமூல விண்ணப்பத்தின் அடிப்படையில் தொடர்ச்சியாக 84 நாட்கள் அல்லது அவ்வப்போது 159 நாட்களுக்கு மேற்பட்ட காலம் அனைத்து பணிகளும்	வரையறுக்கப்பட்டு கிடைக்கப் பெறுகின்ற நிதியேற்பாட்டில் ஆங்காங்கே கட்டுமானப் பணிகள் பகுதிகளாக மேற்கொள்வதற்கு பதிலாக முன்னுரிமைகளை அடையாளம் கண்டு நலன்கள் கிடைக்கக் கூடிய வகையில் நிதியேற்பாட்டினை பயன்படுத்தப்படல் வேண்டும்.

அமைந்துள்ள அரங்கொட குளத்தின் மட்டக் கெமிழியின் நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்களின் கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	நிறுத்தப்படல் போன்ற காரணங்களினால் ஒப்பந்தத்தின் 20.6 பிரிவு மற்றும் 2022 ஏப்ரல் 26 திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பரஸ்பர (விருப்பத்தேர்வு) முடிவுறுத்தல் பரிந்துரை செய்யப்பட்டது. இதன் விளைவாக, பரஸ்பர ரீதியில் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது.	
(iv)கீனானீ குளத்தில் மற்றும் மிமின்நாகொல்ல குளத்தின் நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்களில் ரூபா 158.27 மில்லியனான 124 வேலை உறுப்படிகள் மேற்கொள்ளப்படாது எஞ்சியிருந்தது. 2023 ஆம் ஆண்டில் இந்த கட்டுமானம் நிறைவு செய்யவதற்கு போதுமான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அப் பணிகள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையினால் கட்டுமானங்களின் கம்பிகள் மூடும் விதத்தில் தற்காலிகமாக கொய்கிரீட் அடுக்கு இடப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 22.08 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.	மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பிரகாரம் கினானீ மற்றும் மிமின்னாகொல்ல குளங்களின் நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்களின் கட்டுமான பணிகள் நிறைவு செய்ய முடியவில்லை. அவ்வாறே தேசிய செயற்பாட்டு அறையின் ஒருங்கிணைப்பாளர்/ செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்ணகரிப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் "தேசிய செயற்பாட்டு அறை-கூட்ட அறிக்கை" என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட DPMM/NOR/1-3 ஆம் இலக்க மற்றும் 2023.10.11 திகதிய கடிதத்தின் பிரகாரம், பொருத்தமான முதலீட்டாளரொருவர் கண்டுப்பிடுக்கப்படும் வரை, பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டிருந்த ஒப்பந்தங்களின் பணிகளை பாதுகாப்பாக நிறுத்துமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கினானி மற்றும் அரங்கொட குளங்களின் நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்களில் மேவுகை செய்யப்பட்டிருந்த கம்பிகள் (சுநகைழசஉநஅநவெள) துரப்பிடிக்காதிருக்கும் வகையில் அக் கம்பிகள் மூடும் வகையில் மட்டும் ஒரு கொங்கிரீட் பாதுகாப்பு அடுக்கு இடப்பட்டது.	தற்காலிகமாக கொங்கிரீட் தளத்திற்கு செலவிடப்பட்ட பணத்தொகைக்காக உரிய காலத்திற்குள் கட்டுமான பணிகள் மேற்கொள்ளாத உத்தியோகத்தர்கள் பொறுப்பேற்க வேண்டியமையினால் இது தொடர்பாக விசாரணையொன்று நடத்தப்பட்டு அரசிற்கு ஏற்பட்ட நட்டங்கள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(இ) **கிவுல் ஓயா நீர்தேக்க செயற்திட்டம்**

இந்த செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 8,000 மில்லியன் ஆவதுடன் செயற்திட்ட காலம் 04 ஆண்டுகளாகும். 2023 ஆம் ஆண்டு வரையில் திரட்டப்பட்ட நிதி செயன் முன்னேற்றம் ரூபா 29.67 மில்லியன் ஆகியமையினால் ஒட்டுமொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 3.45 சதவீதமான மிகவும் குறைந்த மதிப்பை கொண்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2024 ஆம் ஆண்டு தொடக்கம் நிதியேற்பாடு ஒதுக்கம் நிறுத்தப்பட்டிருந்தமையினால் இது வரையில் ஏற்கப்பட்ட செலவில் பொருளாதாரத்திற்கு எந்தவொரு நலன்களும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.	பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	செயற்திட்ட கட்டுமானங்கள் மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு விரைவாக பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். பாதீட்டில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை குறித்த ஆண்டில் செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) உமாஓய பல்கரும அபிவிருத்திச் செயற்திட்டம்		
(i)இந்த செயற்திட்டத்தின் கீழ் தலைமைப் பணிகள் மற்றும் நீர்மின் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் ஈரானிய அரசாங்கத்தின் உதவியுடன் ஒரு ஈரானிய நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு ஆரம்பத்தில் 2010 ஆண்டு தொடக்கம் 2015 மார்ச் வரையில் 05 ஆண்டுகளில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அத் திகதியில் நிறைவு செய்வதற்கு முடியாமல் செயற்திட்ட காலம் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையில் நீட்டிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டம் 2015 மார்ச் தொடக்கம் 2024 ஏப்ரல் 03 ஆம் திகதி வரையில் 09 ஆண்டுகள் தலைமைப் பணிகள் உட்பட நீர்மின் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் தாமதமாகியிருந்தது. இக் காரணத்தினால் 120 மெகாவொட் நீர் மின்சாரத்தை மின் கட்டமைப்புடன் இணைப்பது	இத்தகைய செயற்திட்டமொன்றின் முழுமையான நலன்கள் பெற்றுக் கொள்வதற்கு செயற்திட்டத்தின் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்படுதல் வேண்டும். ஆயினும் 4500 ஹெக்டேர் புதிய காணிக்கும் 1500 ஹெக்டேர் விவசாய நிலத்திற்கும் நீர்ப்பாசனம் வழங்குவதற்கு சுரங்கப் பாதை முழுமையாக நீரினால் நிரப்பப்பட வேண்டியதுடன் மின்சார உற்பத்தியின் பின்னர் நீர் வெளியேற்றப்பட வேண்டும். சுரங்க பாதையில் மற்றும் நீர்மின் உற்பத்தியில் காணப்பட்ட சில தடைகளின் காரணத்தினால் மேற்படி மின்சாரம் எற்பத்தி செய்யப்பட்ட பின்னர் வெளியேற்றப்பட வேண்டிய நீர் வெளியேற்றப்படல் தாமதமாகிய போதிலும் உமா	எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் தாமதமின்றி செயற்திட்டம் நிறைவு செய்வதற்காக நிறுவனத்தின் கட்டுமானம் மற்றும் நிதி திறன் பரிசீலித்த பின்னர் மட்டுமே செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் விரைவாக செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். பாதீட்டின் போது ஒதுக்கப்பட்ட பணத்தொகை குறித்த ஆண்டின் போது செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

தாமதமாகியிருந்தது. இதற்கு மேலதிகமாக 2020 ஏப்ரல் தொடக்கம் நீர்மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு திட்டமிடப்பட்ட நீர் அளவு கிரிந்தி ஓயா வடிநிலத்திற்கு வெளியேற்றப்பட்ட போதிலும் கீழ் பள்ளத்தாக்கின் தொடர்புடைய கட்டமைப்புகள் 2025 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையில் முழுமையாக நிறைவு செய்யப்படாமையினால் 4500 ஹெக்டேர் புதிய நிலம் மற்றும் 1500 ஹெக்டேர் விவசாய நிலத்திற்காக நீர்ப்பாசனம் வழங்குதல், மொணராகலை மற்றும் ஹம்பந்தோட்டடை மாவட்டங்களின் மக்களின் குடிநீர் தேவை பூர்த்தி செய்தல் பிரதேசத்தின் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தல் உள்ளடக்கிய அபிவிருத்தி நலன்கள் பல இழக்கப்பட்டிருந்தன.	ஓயாவின் கீழ் பள்ளத்தாக்கு பகுதியை அபிவிருத்தி செய்வதன் ஊடாக 4500 ஹெக்டேர் காணியின் மற்றும் 1500 ஹெக்டேர் விவசாய நிலத்தின் சுமார் 25% இற்கு அக் காலப்பகுதியில் நீர்ப்பாசனம் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் முழுமையான நலன்கள் கிடைக்கும் வரையில் மேற்படி மொனராகலை மற்றும் ஹம்பந்தோட்டடை மாவட்டங்களின் மக்களின் கிராமப்புற பொருளதாரத்தை மேம்படுத்துவதற்கும் சுற்றுசூழல் நிலையை மேம்படுத்துவதற்கும் இந்த செயற்திட்டத்தின் ஊடாக அக் காலப்பகுதியினுள் ஓரளவு பங்களிப்பினை வழங்கியிருந்தது.	
(ii)2023 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு யதாரிக்கப்பட்ட செயற்திட்டத்தின் இறுதி கணக்குகள் பிரகாரம் செயற்திட்டத்தின் பிரதான சுரங்கப்பாதையில் ஏற்பட்ட நீர் கசிவுக்காக ஒப்பந்தக்காரரினால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டுக்காக அரசாங்க நிதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,127.59 மில்லியன் தொகை ஈரானிய ஒப்பந்த கம்பனியிமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் அத் தொகை 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றேன். இந்த இழப்பீட்டு தொகை இடைக்கால பட்டியல்களில் அறவிடல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்ததுடன் IR/2023/49 ஆம் இலக்க மற்றும் 2024 செப்தெம்பர் 09 திகதிய அமைச்சரவை பத்திரிக்கை பிரகாரம் இழப்பீட்டு தொகை நிறுத்தி வைக்கப்பட்டத் தொகையில் அறவிடப்படுவதற்காக நீர்ப்பாசன அமைச்சு தீர்மானிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தவறுகள் சீர் செய்யும் காலம் நிறைவடையாதமையினால் நிறுத்தி வைக்கப்பட்ட தொகையின் எஞ்சிய பகுதி விடுவிக்கப்படவில்லை. (இந்த நிறுத்தி வைக்கப்பட்ட எஞ்சிய தொகை இந்த இழப்பீட்டு தொகை செலுத்துவதற்கு போதுமானதாக இல்லை என்றும் அவதானிக்கப்படுகின்றது)	இழப்பீடாக செலுத்தப்பட்ட பணத்தொகை ஒப்பந்தக்கார நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியதுடன் இதுவரையில் அத்தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் அதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

(iii) உமா ஓயா கீழ் பள்ளத்தாக்கு செயற்திட்டத்தின் கீழான ரூபா 11,061.50 மில்லியனான கட்டுமானம் மற்றும் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு மற்றும் பிற அரசாங்க நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டமை குறிப்பிடப்பட்டு கணக்குகள் தாயரிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த தரப்பினரினால் சொத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டு கையளித்தல் மற்றும் கையேற்றல் எழுத்துமூலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை	சொத்துக்கள் கையளித்தல் மற்றும் கையேற்றல் தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(iv)உமா ஓயா செயற்திட்டத்தின் பிரகாரம் மேல் பள்ளத்தாக்கு கட்டுமானம் தொடர்பாக ஹாலி எல, வெலிமட மற்றும் ஊவா பரணகம பகுதிகளில் விவசாய நிலங்களை இழந்த 279 குடும்பங்களுக்காக கீழ் பள்ளத்தாக்கில் வெல்லவாய மற்றும் ஹல்தும் முல்ல பிரதேச செயலாளர் பிரிவுகளில் தரிசு மற்றும் வயல் நிலங்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் அவ்வாறு இனங்காணப்பட்ட நிலங்களை அத்துமீறிய குடியேற்பாளர்கள் கைப்பற்றியமை, அடர்ந்த காடுகள், காட்டு யானைகளின் அச்சுறுத்தல்கள், வசிக்கும் இடத்திலிருந்து அதிக தூரம், சுற்றுசூழல் மற்றும் சமூக வேறுபாடுகளுடன் பழகுவதில் உள்ள சிரமங்கள் காரணமாக அந் நிலங்களை பெறுவதை அவர்கள் மறுத்திருந்ததுடன் அவ் விவசாய நிலங்கள் வழங்குவதிலிருந்த சிக்கல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை	விவசாய நிலங்களை இழந்த குடும்பங்களுக்கு பொருத்தமான காணிகள் வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தல் வேண்டும்.

4.3 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் பல-கட்ட நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறை செயற்திட்டம்**		
(i)	இந்த செயற்திட்டம் செயற்படுத்துவதன் ஊடாக உயர் தாக்க வானிலை மற்றும் நீரியல் அபாயங்கள் பற்றிய எச்சரிக்கையை மேம்படுத்தல் மற்றும் காலநிலை மீள்தன்மையை மேம்படுத்துவதற்காக களனிப் ஆற்றுப்பள்ளத்தாக்கு பலநோக்கு நீர் உட்கட்டமைப்பை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். இதன் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் 93 மில்லியன் ஐ.அ.டொ இற்கு சமனான ரூபா 27,900 மில்லியன் ஆவதுடன் அதில் 92 மில்லியன் ஐ.அ.டொ இற்கு சமனான ரூபா 27,600 மில்லியன் நிதி பங்களிப்பு உலக வங்கியினால் பெற்றுக் கொடுப்பதற்கு உடன்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2021 ஒக்தோார் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2026 திசெம்பர் 31 இல் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 திகதியாகையில் செயற்திட்ட காலத்தில் 03 ஆண்டுகள் காலம் கடக்கப்பட்டிருந்த போதிலும் இதன் ஒட்டுமொத்த பௌதிக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் முறையே 41.6 சதவீதம் மற்றும் 10.49 சதவீதம் ஆன குறைந்த முன்னேற்றத்தினை கொண்டிருந்தது.	இந்த செயற்திட்டம் ஆரம்பத்திலிருந்தே செயற்திட்ட முகாமைத்துவத்திற்கு அப்பாற்பட்ட தடைகளின் காரணத்தினால் செயற்திட்ட பணிகளில் குறைந்த செயலாற்றல் 2023 ஆம் ஆண்டு வரையில் காணப்பட்டதுடன் அந் நிலைமை தவிர்த்துக் கொள்வதற்காக புதிய மூலோபாயத் திட்டத்தின் பிரகாரம் பெறுகைத் திட்டம் திருத்தப்பட்டு உலக வங்கியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு பெறுகை செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது.	திட்டமிடப்பட்ட திகதியில் செயற்திட்டங்களை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு குறித்த ஆண்டிலேயே செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ii)	செயற்திட்டத்தின் கீழ் அம்பதலே உப்புத் தடுப்பிற்கு பதிலாக புதிய உப்புத் தடுப்பொன்று நிர்மாணித்தல் போன்ற பிரதான கட்டுமானத்தின் செயலாற்றல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடக்கப்பட்டிருந்த போதிலும் உப்புத் தடுப்பு கட்டுமானம் ஆரம்பிப்பதற்கான திட்டமேனும் நிறைவு செய்வதற்கு முடியாமை பிரச்சினைக்குரியதாகும்.	திட்டம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு மேம்படுத்துவதற்கு டென்டர் பத்திரிக்கை தாரிப்பதற்காக ஆட்சேர்க்கப்பட்ட மதியுரை நிறுவனம் அடிப்படைத் திட்டத்தை மீளாய்வு செய்யும் போது அது முழுமையாக இன்மையினால் பல குறைப்பாடுகள் காணப்படுகின்றமையினால் அடிப்படை திட்டத்திற்கு மாறுபாடுகளை பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அப்	செயற்திட்டம் நிறைவு செய்வதற்கு முன்னர் உப்புத் தடுப்பை அமைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும்.

		பரிந்துரைக்காக உலக வங்கியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கும் போது மதியுரை நிறுவனத்தின் ஒருவர் உலக வங்கியினால் கருப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தமையினால் அதை அங்கீகரித்துக் கொள்ள முடியவில்லை. இந்த நிலைமையின் அடிப்படையில் உப்புத் தடுப்பு கட்டுமானம் செய்வதற்கு போதுமான காலம் செயற்திட்டத்தில் இந்த கட்டத்தில் இல்லாமையின் காரணத்தினால் கடந்த உலக வங்கி அவதானிப்பின் போது இந்த உப்புத் தடுப்பு கட்டுமான பணிகள் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டம் வரையில் தாமதிப்பதற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டது. செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்தில் மேற்கூறப்பட்ட அடிப்படை திட்டம் மேம்படுத்தப்பட்டு இறுதி கட்டுமான திட்டம் தயாரிக்கப்பட்டு ஏல ஆவணங்கள் தயாரித்தல் மட்டும் மேற்கொள்ளப்படும். இந்த நடவடிக்கைகள் அடுத்த ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் நிறைவு செய்யப்படும்.	

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நீர்ப்பாசன அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 519 வாகனங்களில் 69 வாகனங்கள் மட்டும் அமைச்சின் போக்குவரத்து பிரிவின் கட்டுப்பாடு மற்றும் இயக்கத்தின் கீழ் காணப்படுகின்றதுடன் எஞ்சிய 450 வாகனங்கள் அமைச்சின் போக்குவரத்து பிரிவின் கட்டுப்பாடு மற்றும் இயக்கமின்றி பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் 590 காணப்படுகின்றதென அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் அதில் 69 வாகனங்கள் தற்போது அமைச்சின் கட்டுப்பாட்டுப் பிரிவின் கீழ் காணப்படுகின்றது. பிற நிறுவனங்களின் கீழ் பயன்படுத்தப்படுகின்ற	அரசாங்கத்தின் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் பயன்படுத்தப்படுகின்ற அரசாங்கத்திற்கு சொந்தமான அனைத்து வாகனங்களும் அந் நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள

	இந்த 450 வாகனங்களில் அமைச்சின் கீழான வேறு நிறுவனங்கள், மற்றும் வெளி நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை 333 ஆகும். அதன் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன அமைச்சின் 2017 திசெம்பர் 31 திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் அனைத்து நிறுவனங்களாலும் பயன்படுத்தப்படுகின்ற அரசாங்கத்திற்கு சொந்தமான அனைத்து வாகனங்களும் அந் நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வது அத்தியாவசியமானது என்றாலும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் அந் நிறுவனங்களுக்கு கையளிக்கும் பணிகள் மேற்கொள்வதற்காக அவ் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் உறுதி செய்துக் கொள்வதற்கு தகவர்கள் கோரப்பட்டுள்ளன. அத் தகவல்கள் விரைவாக பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும். இதற்காக நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையிடம் தகவல்கள் கோரப்பட்டுள்ளன.	அனைத்து வாகனங்களினதும் நிலைத்திருத்தன்மை உறுதி செய்யப்படுதல் வேண்டும். அரசாங்க வாகனங்கள் வெளி நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக விசாரணையொன்று நடத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள, உயர் சந்தை பெறுமதியிலான ஆடம்பர வகையைச் சேர்ந்த 1800 CC இற்கும் அதிகமான எஞ்சின் திறனைக் கொண்ட 01 பெட்ரோல் வாகனமும்ம் 2300 CC இற்கு அதிகமான எஞ்சின் திறனைக் கொண்ட 07 டீசல் வாகனங்களும் பயன்படுத்தப்படாது அமைச்சின் வளாகத்தில் திறந்த வெளியில் ஒரு ஆண்டுற்கும் அதிக காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை 2025 ஏப்ரல் 29 ஆம் திகதி அன்று மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.	05/2024 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் சுற்றறிக்கை பிரகாரம் 1800CC/2300CC இற்கு அதிகமான வாகனங்கள் ஏலமிடுவதற்காக 41 வாகனங்களின் தகவல்கள் கொம்ப்ரோலர் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.அதில் 22 வாகனங்கள் மீண்டும் அமைச்சின் பயன்பாட்டுக்காக அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 19 வாகனங்கள் ஏலமிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருகின்றது. அந் நடவடிக்கைகள் விரைவுப்படுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	தேவைக்கு பொருந்தாத இவ்வாறான வாகனங்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக விசாரணைொன்று நடத்தப்பட்டு அதற்கு பொறுப்பேற்க வேண்டிய உத்தியோகத்தர்கள் அடையாளப்படுத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் கைதவிர்ப்பு செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்ந்தும் தாமதிக்காது கைதவிர்ப்பு செய்யப்படல் வேண்டும்.
(இ)	மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு தளத்தின் பிரகாரம் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 06 வாகனங்கள் மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான தம்புத்தேகம பிராந்திய அலுவலகத்தில்	பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) இன் தலைமைத்துவத்துடன் மூன்று உத்தியோகத்தர்களினாலான வாகனங்கள் பரிசோதனை குழுவிற்கு இந்த வாகனங்கள் பரிசோதிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அப்	பாதுகாப்பின்றி அரசிற்கு சொந்தமான வாகனங்கள் தரித்து வைத்தல் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் பரிசோதனைகள் விரைவில் நிறைவு செய்யப்பட்டு வாகனங்கள்

	ஆங்காங்கே தரித்து வைக்கப்பட்டிருந்தமை மற்றும் சில களஞ்சியங்களில் பூட்டி வைக்கப்பட்டிருந்தமை 2024 மார்ச் 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. இங்கு வாகனங்கள் பயன்படுத்தி உத்தியோகத்தர்கள், அவ் வாகனங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் திகதிகள், அவை பயன்படுத்தப்பட்ட நோக்கங்கள் மற்றும் இந்த இடத்தில் நிறுத்தி வைத்திருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பான எந்தவொரு தகவலும் பிராந்திய அலுவலகத்தினால் வழங்கப்பட முடியாமையினால் இந்த வாகனங்கள் தவறாக பயன்படுத்தப்பட்டிருக்க கூடும் என்ற சந்தேகம் கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதிருந்தது.	பரிந்துரையின் அடிப்படையில் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	பயன்படுத்தப்பட வேண்டியதுடன் இது தொடர்பாக பொறுபேற்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் அடையாளப்படுத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	நீர்ப்பாசன அமைச்சின் வாகனங்கள் தகவல்களில் உள்ளடக்கப்படாத போதிலும் வெளி நிறுவனங்களுக்கு சொந்தமான 05 வாகனங்கள் அமைச்சின் வளாகத்தில் நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு பயன்படுத்தாது நீண்ட காலமாக வெளிச்சூழலுக்கு வெளிப்படுமாறு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையினால் தற்போது சிதைவடையும் அபாயத்திற்கு முகங் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், இந்த வாகனங்களை அமைச்சின் வளாகத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த வாகனங்கள் மீண்டும் குறித்த நிறுவனங்களுக்கு கையேற்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டேன்.	அமைச்சு வளாகத்திலிருந்து இந்த வாகனங்கள் அகற்றப்பட்டு அவற்றின் உரித்தினை உடைய நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4.5 நட்டங்களும் சேதங்களும்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
விபத்துக்குள்ளான ஒரு கப் இற்கு ஏற்பட்ட ரூபா 10.48 மில்லியன் ஆன முழு இழப்பீட்டுத் தொகையையும் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கப் வாகனம் விபத்துக்குள்ளானமைக்கு காரணமானதாகக் கண்டறியப்பட்ட வாகனத்தின் ஓட்டுநரிடமிருந்து ரூபா 10.48 மில்லியன் ஆன நட்டத்தொகை அறவிடப்படுவதற்கு முடியாமையினால் இந்த நிகழ்வு தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு தேவையான ஆவணங்கள் அமைச்சின் சட்ட உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவ் ஆவணங்கள் மேல் நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென சட்ட உத்தியோகத்தரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.	நட்டத்தொகை அறவிடப்படுவதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் நட்டம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

4.6 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கொத்தமலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனத்தில் சர்வதேசரீதியில் பயிற்சி பாடநெறிகள் நடத்துவதற்காக 2017 யூலை மாதம் 18 திகதிய 17/1456/729/017 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் அங்கீகாரம் பெறப்படுவதற்கு முன்னர் 02 பயிற்சி பாடநெறிகள் மற்றும் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் 03 பயிற்சி பாடநெறிகள் மட்டும் நடத்தப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் பின்னர் எந்தவொரு பாடநெறிகளும் நடத்தப்பட்டிருக்கவில்லை.	வெளிநாட்டு தூதரகங்களுடன் ஒருங்கிணைவது தொடர்பாக அமைச்சின் ஒத்துழைப்பு கோரப்பட்டது. அதனூடாக பெறப்பட்ட ஆலாசனை பிரகாரம் நீர்ப்பாசனத் துறையில் அறிவுடைய ஓய்வுப்பெற்ற நிபுணத்துவ அரச உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி பாடநெறிகள் தொகுதிகளை தயாரிப்பதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.	சர்வதேச பயிற்சி பாடநெறிகள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	சர்வதேச மட்டத்தில் பயிற்சி பாடநெறிகளை விளம்பரம் செய்வதற்குள்ள பிரதான ஊடகமாக நிறுவனத்தின் இணையத்தளத்தை பயன்படுத்த முடியுமான போதிலும் வெளிநாட்டு	ஒவ்வொரு பிரிவிற்கு ஏற்ப இணையத்தளத்தில் திருத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களால் குறித்த வண்ணம் பொருத்தமாக	வெளிநாட்டு மாணவர்களை ஈர்ப்பதற்காக நிறுவனத்தின் இணையத் தளத்தை பயன்படுத்த வேண்டும்.

மாணவர்களைக் கவரும் வகையில் எந்த விதமான விளம்பரமும் அதனூடாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நாளதுவரையாக்கப்படல் வேண்டும். மேலும் நிறுவனத்தின் பதவியிணரில் காணப்படுகின்ற குறைப்பாடுகள் மற்றும் நிபுணத்துவம் உடையவர்களின் பற்றாக்குறையினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட பயற்சி உரிய வண்ணம் பயன்படுத்துவதில் நலிவுகள் காணப்பட்டன. அதன் பிரகாரம் இது எங்கள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் இதன் தகவல்கள் தொடர்ந்தும் நாளதுவரையாக்கப்பட்டு வருகின்றது.	

5. மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 441 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாரான பதவியணி 332 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் சிரேஷ்ட நிலையில் 21 பதவிகளும், மூன்றாம் நிலையில் 02 பதவிகளும், இரண்டாம் நிலையில் 69 பதவிகளும் முதன்மை நிலையில் 17 பதவிகளுமாக 109 வெற்றிடங்கள் காணப்பட்டன.	109 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றதென சிரேஷ்ட உதவிச் செயலாளரின் (கட்டுப்பாடு) இன் MOI/AD/06/01/01(II) ஆம் இலக்க 2025 சனவரி 08 திகதிய கடிதத்தின் ஊடாக 04/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலாண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஓட்டுநர் சேவையின் வெற்றிடங்கள் தெரிவிப்பதற்காக 2024.10.15 திகதிய கடிதத்தின் ஊடாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது.	நிறுவன நடவடிக்கைகள் பேணிச் செல்வதற்கு தேவையான பதவியிணர் தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நீர்ப்பாசன அமைச்சிற்கு 2018 ஆம் ஆண்டில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த இலங்கை பொறியியல் II சேவையின் II ஆம் வகுப்பின் ஆம் தரத்தின் உத்தியோகத்தருக்காக	பணிப்பாளர் (தொழிநுட்ப கணக்காய்வு) பதவியில் கடமை நிறைவேற்றுவதற்காக இலங்கை பொறியியல் சேவையில் I ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுடன்	பணிப்பாளர் (தொழிநுட்ப கணக்காய்வாளர்) பதவிகளில் கடமை நிறைவேற்றுவதற்காக அரசாங்க சேவைகள் ஆனைக்குழுவினால் பெற்றுக்

அமைச்சின் இரண்டு பதவிகளும் அதன் கீழான கம்பனியொன்றில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் பணிப்பாளர் சபையின் உறுப்பினராக மற்றும் அமைச்சின் கீழான செயற்திட்டமொன்றில் பணிப்பாளராக 4 பதவிகளின் கடமைகள் பணிக்கப்பட்டிருந்தது.

2019 செப்தெம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் 2020 செப்தெம்பர் 14 ஆம் திகதி வரையில் அவரின் நிரந்தர பதவிக்கு மேலதிகமாக அமைச்சின் பணிப்பாளர் (தொழிநுட்ப கணக்காய்வு) பதவியின் கடமை நிறைவேற்றுவதற்காக அரசாங்க சேவைகள் ஆனைக்குழுவினால் பின்னோக்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் வரையிலும் பணிப்பாளர் (தொழிநுட்ப கணக்காய்வு) பதவியில் கடமையாற்றிருந்தார். மேலும் இந்த உத்தியோகத்தர் 2020 செப்தெம்பர் 28 திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் ‘‘வெவ்கம புபுதுவ’’ செயற்திட்டத்தின் பதிற் கடமை பணிப்பாளர் ஆக நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் 2020 செப்தெம்பர் 29 திகதிய கடிதத்தின் ஊடாக நியமிக்கப்பட்டிருந்தார்.

இதற்கு லேதிகமாக நியமன அதிகாரியின் முறையான அங்கீகாரமின்றி நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரினால் மகாவலி கன்சல்டன்சி பியுரோ (தனி) கம்பனியின் பணிப்பாளர் சபை உறுப்பினர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் 2021 சனவரி 07 ஆம் திகதி மற்றும் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி நியமிக்கப்பட்டு மாதாந்தம் ரூபா 52,342 கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது.

கலந்துரையாடப்பட்டு 2023.07.11 ஆம் திகதி வேறு உத்தியோகத்தரொருவர் பணிப்பாளர் (தொழிநுட்ப கணக்காய்வு) பதவிக்காக நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) இன் 2023.09.04 திகதிய உள்ளக மேமோ ஊடாக மற்றும் 2023.10.03 திகதிய கடிதத்தின் ஊடாக அவ் உத்தியோகத்தருக்கு கடமைகளை கையளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023.12.08 திகதிய மேற்படி பதவியில் கடமையேற்றிருந்தார். இந்த அமைச்சின் பணிப்பாளர் (உற்பத்தித்திறன் அபிவிருத்தி மற்றும் தொழிநுட்ப கணக்காய்வு பிரிவு) ஆக கடமையாற்றிய பொறியியலாளர் 01/2019 அம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2.3.3(C) பிரிவின் பிரகாரம் பதிற்கடமை அடிப்படையில் மேலதிக செயலாளர் செயற்திட்ட பணியாளர்கள் மற்றும் முன்னேற முகாமைத்துவ பொறுப்பாளரின் 2020.09.29 திகதிய கடிதத்தின் ஊடாக வெவ்கம புபுதுவ செயற்திட்டத்தின் பதிற் கடமை செயற்திட்ட பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என தெரிவித்துக் கொள்கின்றேன்.

கொடுக்கப்பட்டிருந்த பின்னோக்கு அங்கீகாரத்தை மிகைத்து எந்தவொரு அனுமதியுமின்றி சேவையாற்றியமை தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கும், செயற்திட்டத்திற்காக எப்போதும் நிரந்தமாக செயற்திட்ட பணிப்பாளர்கள் ஆட்சேர்ப்பு செய்வதற்கும் முறையற்ற நியமனங்கள் மற்றும் அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளங்கள் கொடுப்பனவு செய்தல் சட்டரீதியானதாக இன்மையினால் அக் கொடுப்பனவுகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(இ)	முறையான அங்கீகாரமின்றி நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரினால் 2021 பெப்ரவரி 23 திகதிய கடிதத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தரொருவர் மகாவலி கன்சல்டன்சி பியுரோ (தனி) கம்பனியின் செயற்திட்ட முகாமைத்துவ உத்தியோகத்தர் பதவியில் கடமை மேவுகைக்காக இணைக்கப்பட்டிருந்ததுடன் இந்த நியமனத்திற்குரிய தகவல்கள் எதுவும் அவரின் தனிப்பட்ட கோவைக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இவ்வாறு கடமை மேவுகை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் எந்தவொரு கொடுப்பனவும் செலுத்தல்களும் பெற்றுக் கொள்வதற்கு உரித்து அற்றவர்களான போதிலும் இந்த உத்தியோகத்தருக்காக 2021 மார்ச் தொடக்கம் மாதாந்தம் ரூபா 60,907 தொகையான கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது.	பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	முறையற்ற நியமனம் மற்றும் அதன் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளங்கள் சட்டரீதியானவை அல்ல என்பதனால் அது வரைவாக சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.